முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2025 சனவரி

## (103) பொருளியல்

(Economics)

2025-02-08
பிற்பகல்
[2.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

(1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***வரைபுத் தாள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக..

**1.1** கீழ்வருவனவற்றுள் பொருளாதாரமற்ற பொருள்களின் ஒரு பண்பியல்பாக அமைவது எது?

(1) தெளிவான உரிமை காணப்படல். (2) பூச்சிய சந்தர்ப்பச் செலவு.

(3) பொருள்களுக்கு விலை காணப்படல். (4) வழங்கலில் அரிதான தன்மை காணப்படல்.

**1.2** நேர்மறையான (positive) பொருளியல் கூற்று தொடர்பில் கீழ்வருவனவற்றில் சரியானதாக **அமையாதது** எது?

(1) ஒரு பண்டத்தின் விலைக்கும் கேள்விக் கணியத்திற்கும் இடையில் நேர்மாறு (inverse) தொடர்பு காணப்படுகிறது.

(2) 2023 இல் இலங்கையின் சனத்தொகை 23.1 மில்லியனாக இருந்தது.


(3) 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் வேலையின்மை வீதம் 4.7% ஆக இருந்தது.

(4) அரசாங்கம் சூழலைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**1.3** ஒரு பொருளின் மேலதிக அலகொன்றை நுகரும் ஒரு மனிதனுக்குக் கிடைக்கின்ற மேலதிக திருப்தி எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(1) எல்லைப் பயன். (2) மொத்தப் பயன்.
(3) சந்தர்ப்பச் செலவு. (4) பயன்.

**1.4** கீழ்வரும் வரிப்படம் ஒரு நாட்டின் உற்பத்திச் சாத்திய வளையியைக் காட்டுகிறது :




கீழ்வருவனவற்றுள், புள்ளி "P" இனால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திற்கான மிகவும் பொருத்தமான விளக்கமானது :

(1) வளங்களின் குறை – பயன்பாடு. (2) முழு வேலை.
(3) பொருளாதார வளர்ச்சி. (4) பணவீக்கம்.

**1.5** கீழ்வரும் கூற்றுக்களிலிருந்து சரியான கூற்றைத் தெரிவு செய்க :

(1) இலாபம் என்பது மூலதனத்திற்கான வெகுமதி ஆகும்.
(2) வளங்களின் பற்றாக்குறை காரணமாக மக்கள் தெரிவுகளை மேற்கொள்கின்றனர்.
(3) பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பன மீள்புதுப்பிக்கத்தக்க (renewable) வளங்களுக்கான உதாரணங்கள் ஆகும்.
(4) சந்தர்ப்பச் செலவு என்பது பொருள்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கான வளங்களின் மாற்றுப் பயன்பாடு ஆகும்.

**1.6** 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்தப் பொருளாதார மீளாய்வுக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் தனிநபர் வருமானம் :

(1) 4,082 அமெரிக்க டொலர் (2) 3,982 அமெரிக்க டொலர்
(3) 3,830 அமெரிக்க டொலர் (4) 4,372 அமெரிக்க டொலர்

**1.7** கீழ்வருவனவற்றுள் மனித அபிவிருத்தியின் ஓர் தோற்றவடிவமாக (profile) அமைவது எது?

(1) வருமானம். (2) கல்வி.
(3) ஆரோக்கிய நிலை. (4) மேற்கூறிய யாவும்.

**1.8** கீழ்வருவனவற்றுள் கேள்வி வளையி வலப் பக்கமாக நகர்வதற்கான ஒரு காரணமாக அமைவது எது?

(1) பிரதியீட்டுப் பொருள்களின் விலை அதிகரிப்பு (2) நிரப்புப் பொருள்களின் விலை அதிகரிப்பு.

(3) நுகர்வோரின் வருமான வீழ்ச்சி. (4) பிரதியீட்டுப் பொருள்களின் விலை வீழ்ச்சி.

**1.9** குறைந்துசெல்லும் எல்லை விளைவு விதியின்படி, மொத்த உற்பத்தி உச்சமடையும்போது :

(1) எல்லை உற்பத்தி பூச்சியமாக மாறும்.

(2) சராசரி உற்பத்தி பூச்சியமாக மாறும்.

(3) சராசரி உற்பத்திப் பெறுமதி எதிர்மறையாக (negative) மாறும்.

(4) சராசரி உற்பத்தி எல்லை உற்பத்திக்குச் சமமாக இருக்கும்.

**1.10** கீழ்வருவனவற்றுள் எது சென்மதி நிலுவைக் கூற்றின் நிதிக் கணக்கில் **உள்ளடக்கப்படாது**?

(1) வெளிநாட்டு நேரடி முதலீடு. (2) ஏற்றுமதி மீதான வருமானம்.

(3) வெளிநாட்டு ஒதுக்கச் சொத்துகள். (4) தனியார்மயமாக்கல் மீதான பெறுவனவுகள்

*இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குச் சரியான சொல் / சொற்களை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல் / சொற்களை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.11** மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான வளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு .................. *(சந்தர்ப்பச் செலவு / அரிதானதன்மை)* என அழைக்கப்படுகிறது.

**1.12** ................. (ஒரு நிலையான / ஒரு நெகிழ்ச்சியான) பரிமாற்ற வீதம் என்பது பரிமாற்ற வீதத்தை சந்தைச் சக்திகள் தீர்மானிக்க அனுமதிக்கின்ற ஒரு முறைமை ஆகும்.

*கீழே **1.13** மற்றும் **1.14** இல் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப் புத்தகத்தில் எழுதுக*

**1.13** ஒரு தனியுரிமை நிறுவனம் சந்தையில் விலை நிர்ணயிப்பாளராகச் செயற்படுகிறது.

**1.14** நுகர்வோர் மிகை என்பது ஒரு பண்டத்தின் சமநிலை விலைக்கும் உற்பத்தியாளர் விற்பனை செய்யத் தயாராக இருக்கும் விலைக்கும் இடையிலான வேறுபாடாகும்.

***1.15** தொடக்கம் **1.20** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.15** ஒரு பொருளாதாரத்தில் உள்ள மூன்று (03) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறிப்பிடுக.

**1.16** நிரம்பல் வளையியை வலப்பக்கமாக நகர்த்தும் இரண்டு (02) காரணிகளைக் குறிப்பிடுக.

**1.17** குறுங்கால உற்பத்திக்கும் நீண்டகால உற்பத்திக்கும் இடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.18** பூரண போட்டி நிறுவனம் ஒன்றின் இரண்டு (02) பண்பியல்புகளைப் பட்டியலிடுக.

**1.19** சென்மதி நிலுவைக் கூற்றின் நடைமுறைக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்ற இரண்டு (02) வகையான பரிவர்த்தனைகள் / உருப்படிகளைப் பட்டியலிடுக.

**1.20** பொருளாதார அபிவிருத்தி என்பதால் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A நிறைவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) ஒரு சந்தைப் பொருளாதார முறைமையின் மூன்று (03) பண்பியல்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) ஒரு பண்டம் தொடர்பாகத் தரப்பட்டுள்ள கீழ்வரும் கேள்விச் (Qd) சார்பையும் நிரம்பல் (Qs) சார்பையும் கவனத்திற் கொள்க :

$$Q_d = 250 - 10p$$

$$Q_s = -50 + 15p$$

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(i) கேள்வி மற்றும் நிரம்பல் அட்டவணை ஊடாக பண்டத்திற்கான சந்தைச் சமநிலை விலையையும் கணியத்தையும் **கணிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(ii) நுகர்வோர் மிகையைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) அரசாங்கமானது ஒரு பண்டத்தின் சமநிலை விலையை விடக் குறைந்த ஒரு விலையை அப்பண்டத்தின் உயர்ந்தபட்ச விலையாக விதிப்பதால் ஏற்படக்கூடிய பொருளாதார விளைவுகளை (consequences) வரைபொன்றின் உதவியுடன் **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) நிறுவனமொன்றின் ஓர் உற்பத்திப் பொருளுக்கான கடந்த மாதத்திற்குரிய கீழ்வரும் தரவுகள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன :

நிறுவனமானது 1,000 அலகுகளை உற்பத்தி செய்து, விற்பனை செய்துள்ளது. விற்பனை விலை அலகொன்றிற்கு ரூபா 50/- ஆகும். இந்நிறுவனம் மூலப்பொருளுக்காக ரூபா 5,000/- ஐயும் நேர் கூலிக்காக ரூபா 500/- ஐயும் ஏனைய நேர் கிரயங்களுக்காக ரூபா 750/- ஐயும் செலவிட்டிருந்தது. மேலும், இந்நிறுவனம் கடந்த மாதத்திற்காக ரூபா 1,200/- ஐ பொருளாதாரத் தேய்மானமாகக் கொண்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

கணக்கீட்டு இலாபத்தையும் பொருளாதார இலாபத்தையும் தனித்தனியாகக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

(a) குறுகிய பண நிரம்பல் ($M_1$) மற்றும் பரந்த பண நிரம்பல் ($M_2$) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) (i) "இலத்திரனியல் பணம் (Electronic Money)" என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(ii) இலத்திரனியல் பணத்தைப் பயன்படுத்துவதற்கான மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் இரண்டு (02) அளவுசார் பணக் கொள்கைச் சாதனங்களைக் (quantitative monetary policy instruments) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(a) (i) ஒரு நாட்டின் பணவீக்கத்தின் இரண்டு (02) பொருளாதாரத் தாக்கங்களை (economic effects) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(ii) ஒரு நாடு, பணவீக்கத்தைக் குறைப்பதற்கு எடுக்க வேண்டிய இரண்டு (02) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **இந்தியாவும் பாகிஸ்தானும் வெங்காயம்** மற்றும் **உருளைக்கிழங்கு** ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்கின்றன. கீழ்வரும் அட்டவணையானது இரு நாடுகளினதும் ஒரு கூலி அலகினால் உற்பத்தி செய்யப்படக்கூடிய **வெங்காயம்** மற்றும் **உருளைக்கிழங்குகளின்** அலகுகளைக் காட்டுகிறது :

| பொருள் / நாடு | வெங்காயம் (kg இல்) | உருளைக்கிழங்கு (kg இல்) |
|---|---|---|
| **இந்தியா** | 18 | 9 |
| **பாகிஸ்தான்** | 2 | 4 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

எந்த நாடு ஒவ்வொரு பொருளினது உற்பத்தியிலும் ஒப்பீட்டு நயத்தைக் கொண்டிருக்கிறது என்பதை **அடையாளங் காண்க** *(உங்களது விடைக்கு ஆதரவான கணிப்பீடுகளைக் காட்டுக).* , (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 மொத்தம்)

*பகுதி B நிறைவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) இரண்டு (02) பேரினப் பொருளாதாரக் கொள்கைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(B) உங்களுக்கு ஒரு பொருளாதாரத்தின் ஒரு வருட காலப்பகுதிக்கான தேசிய கணக்குகளுடன் தொடர்புடைய கீழ்வரும் அனுமானத் தரவுகள் தரப்பட்டுள்ளன :

| | ரூபா மில்லியன் |
|---|---|
| ஊழியர் நட்டஈடு | 50,000 |
| மொத்தத் தொழிற்பாட்டு மிகை | 25,000 |
| கலப்பு வருமானம் | 10,000 |
| உற்பத்தி மீதான மானியங்கள் கழித்த பிற வரிகள் | 5,000 |
| உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீதான நிகர வரிகள் | 4,500 |
| நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் | 15,000 |

**நீங்கள் செய்யவேண்டியவை :**

வருமான அணுகுமுறையைப் பயன்படுத்தி, கீழ்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) மொத்த பெறுமதி சேர்ப்புகள் (GVA) – அடிப்படை விலையில். (05 புள்ளிகள்)

(b) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(c) மொத்தத் தேசிய வருமானம் (GNI) – சந்தை விலையில். (02 புள்ளிகள்)

(C) நேர் வரிக்கும் நேரில் வரிக்கும் இடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(D) தேசிய வருமானக் கணக்குகளின் நான்கு (04) வரையறைகளைக் (limitations) **குறிப்பிடுக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C நிறைவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |